செ.வெ.எண்: 21/2020 நாள்: 21.05.2020

**பொதுப்பணித்துறை - நீர்வள ஆதாரத்துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ரூ.13.93 கோடி மதிப்பீட்டில் 132 குடிமராமத்துப் பணிகள்மேற்கொள்ளப்பட உள்ளது. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் தகவல்!!!**

திருப்பூர் மாவட்டம்,உடுமலைபேட்டை வட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிக்கனூத்து பகுதியில் பொதுப்பணித்துறை - நீர்வள ஆதாரத்துறையின் சார்பில் குடிமராமத்துப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று (21.05.2020) துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

மறைந்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், தமிழகத்தில் நீர் ஆதாரங்களை செம்மைப்படுத்தி, விவசாயிகள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டமான குடிமராமத்துப் பணிகள் 2016-2017 ஆம் ஆண்டு முதல் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி 2020 -2021 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முழுவதும் 1387 பணிகள் ரூ.499.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. பொதுப்பணித்துறை - நீர்வள ஆதாரத்துறை மூலம் பதிவு பெற்ற பாசன சங்கங்கள் (அல்லது) நீரினை பயன்படுத்துவோர் சங்கங்கள் (அல்லது) பாசனதாரர்கள் தொகுப்பு வாயிலாக பணிகளை செயல்படுத்திட அரசு உரிய வழிமுறைகள் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் கால்வாயில் வளர்ந்துள்ள செடிகொடிகள் முட்புதர்களை அகற்றுதல், கால்வாயினை தூர்வாரி சுத்தம் செய்தல். கால்வாயில் சேதமடைந்துள்ள குறுக்கு கட்டங்களை பழுது பார்த்தல், பழுதடைந்த மடைகளை சீரமைத்தல், பழுதடைந்த ஷட்டர்களை புதுப்பித்தல், கால்வாய் கரைகளை பலப்படுத்துதல். குளங்களின் கரைகளை பலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி நமது மாவட்டத்தில் ஆழியாறு வடிநிலக் கோட்டத்தின் வாயிலாக 54 பணிகள் ரூ.501.80 இலட்சங்களிலும், திருமூர்த்திக் கோட்டத்தின் வாயிலாக 45 பணிகள் ரூ.447.94 இலட்சங்களிலும், பவானி வடிநிலக் கோட்டத்தின் வாயிலாக 6 பணிகள் ரூ.88.10

இலட்சங்களிலும், பழனி குதிரையாறு வடிநில கோட்டத்தின் வாயிலாக 1 பணி ரூ.25.00 இலட்சத்திலும் மற்றும் அமராவதி வடிநிலக் கோட்டத்தின் வாயிலாக 26 பணிகள் ரூ.330.41 இலட்சத்திலும் என மொத்தம் நடப்பாண்டில் 132 பணிகள் ரூ.13.93கோடி மதிப்பீட்டில் குடிமராமத்துப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், தாராபுரம், பல்லடம், காங்கயம்ஆகிய வட்டங்களில் உள்ள சுமார் 1,29,336.559 ஹெக்டர் பாசன நிலங்கள் பயன்பெற உள்ளன. மேற்காண் குடிமராமத்துப் பணிகளை விவசாய பெருங்குடி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டுமெனவும், மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு மக்களுக்கு தேவையான அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி தந்து வருகிறார்கள். அதன்படி, 2020-2021 ஆண்டிற்கு நமது மாவட்டத்தில், சுமார் 178.60 கோடி மதிப்பிலான பாசனத்திட்டத்திற்கு நிதியினையும் ஒதுக்கி தந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விவசாயிகளின் நலன் காக்கும் அரசாக செயல்பட்டு வருகிறது. அரசு அளிக்கின்ற அனைத்து திட்டங்களையும் வேளாண் பெருங்குடி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.பாண்டியன், பரம்பிக்குளம் ஆழியாறு வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் திரு.முத்துச்சாமி, திருமூர்த்தி கோட்ட செயற்பொறியாளர் திரு.கோபி, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் திர.ரவிக்குமார், உதவி செயற்பொறியாளர்கள் திருமதி.புவனேஸ்வரி (பொள்ளாச்சி), திரு.காஞ்சிதுரை (உடுமலை கால்வாய் உபகோட்டம்), உதவி பொறியாளர்கள் திரு.ஆதிசிவன், திரு.ஜெயக்குமார், திரு.செந்தில்குமார், திரு.சிங்கார வேல், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.புஷ்பராஜ், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.முரளி, உடுமலை வட்டாட்சியர் திரு.ஜெய்சிங்சிவக்குமார், அரசு அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**